# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/25 - 2018 මාර්තු මස 28 වැනි බදාදා - 2018.03.28

*2064/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டம்**

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய ஆகிய நான், இலங்கை மின்சார சபைக்கு தேவை ஏற்பட்டுள்ள இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியைக் கைப்பற்றுவது தொடர்பான பிரேரணையை இக்கட்டளை மூலம் சிபாரிசு செய்கின்றேன்.

ரஞ்சித் சியம்பலாபிடிய,
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர்.

2018, மாச்சு 22.

**அட்டவணை**

இலங்கையின் மேல் மாகாணத்தில், கொழும்பு நிர்வாக மாவட்டத்தின், ஹேவாகம் கோரளையின் பள்ளிபத்துவின் கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 480, வெலிபிள்ளேவ கிராம அலுவலர் பிரிவில் வெலிபிள்ளேவ எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள காணியின் புவகஹதெனியகும்புர என அழைக்கப்படும் 2004.07.16 ஆந் திகதியிடப்பட்ட இல. 4236 என்ற பதிவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எல். பிரேமசந்திரவினால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன்படி 20.75 பேர்ச்சஸ் அளவு கொண்ட இல. 12 மற்றும் 13 இனால் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டுக்கான எல்லைகள் :-

வடக்கு : $R_1$ காணித்துண்டு 20 அடி வீதிக்காக ஒதுக்கப்பட்டது ;
கிழக்கு : டீ. ஏ. கயன்திலக பெரேரா என்பவர் உரிமை கோரும் 11 ஆம் துண்டு ;
தெற்கு : 10 அடி வீதி ;
மேற்கு : டீ. டிலானி ஜசின்தா பெர்னாந்து என்பவர் உரிமை கோரம் 14 ஆம் துண்டு.

உரிமை கோருபவர் : வருண யசஸ் அம்புல்தெனிய

04-463